DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No: 218/2019**

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **திரு.அழகுமுருகன்** | Father's Name | : | **பெருமாள்** |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No:44 of 1969 of the day of 10.06.2022.

---

**3-ம் எ.த.கு.வி.:**

**கேள்வி** : உங்களுக்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக வாகன ஓட்டுநர் 1ம் எதிரி ரூபன் என்பவரை குறிப்பிட்டுள்ளார்கள் என்றால்?

**பதில்** : சரிதான்.

**கேள்வி** : உங்களுக்கு தரப்பு ஆவணம் ம.த.சா.ஆ.2 குற்ற அறிக்கை ரூபன் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்?

**பதில்** : சரிதான்.

**கேள்வி** : அந்த அறிக்கையில் ரூபனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் மோ.வா.சட்டம் பிரிவு 181ன் கீழும் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்?

**பதில்** : சரிதான்.

**கேள்வி** : ஆகையால் ரூபன் தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதால் அவருடைய உரிமையாளர் 2வது எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றாலும் 3வது எதிர்மனுதாரர் காப்பீடு நிபந்தனையின்படி இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல என்றாலும்?

**பதில்** : சரியல்ல.

கேள்வி : நீங்கள் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.5 ல் காலம் 7 ல் மோட்டார் வாகன அறிக்கையில் வாகன உரிமம் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து சமயத்தில் நீங்களும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் ஓட்டி வந்த வாகனம் சம்பந்தமாக ஓட்டுநர் உரிமத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுடைய வாகனம் சம்பந்தமான ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.6 ல் உங்களுடைய ஓட்டுநர் உரிமம், காப்பீடு சான்றிதழ் மற்றும் வாகன பதிவு சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவில்லை என்று உள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து ஏற்படுத்தப்பட்டவுடன் க.விலக்கு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டீர்கள் என்றாலும் அதற்கான விபத்து பதிவேட்டினை தாக்கல் செய்யவில்லை என்றாலும்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் தான் ஓட்டுநர் உரிமம், காப்பீட்டு சான்றிதழ் மற்றும் வாகன பதிவு சான்றிதழ் இல்லாமல் ஓட்டி வந்து எதிரே வந்த வண்டி மீது அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் உங்களுடைய கவனக்குறைவால் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டீர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : 1வது எதிர்மனுதாரர் கவனக்குறைவால் வாகன விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : எல்.எஸ் மில்லில் நீங்கள் வேலை பார்த்ததற்கான ஆவணம் எதுவும் மற்றும் மாதம் ரூ.15,000/- வருமானம் பெற்றதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து நடந்த தேதியில் இருந்து இன்று வரை தொடர் சிகிச்சையில் இருந்ததற்கான சிகிச்சை ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : நீங்கள் மருந்து வாங்கியது மற்றும் சிகிச்சை மேற்கொண்டதற்கான ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : மனு விபத்தினால் உங்களுக்கு வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : சாதாரணமாக செய்யக்கூடிய வேலைகள் எதையும் நீங்கள் சுலபமாக இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் கேட்கக்கூடிய பரிகாரம் அதிகமானது என்றாலும் 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்த மட்டிலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும்?

பதில் : சரியல்ல.

Taken down by me and read over to the witness in Tamil and admitted by him/her to be correct.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2022.06.10 19:43:55 +0530

Chief Judicial Magistrate,
Theni.
Date: 10.06.2022.